செய்தி வெளியீடு எண்: 66/2026 **நாள்: 10.10.2026**

பத்திரிகைச் செய்தி

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II, வழித்தடம் 4-ல் கட்டம் 1A பயணிகள் சேவை

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-II வழித்தடம் 4-ல், பூவிருந்தவல்லி புறவழிச்சாலை மெட்ரோ இரயில் நிலையம் முதல் வடபழனி மெட்ரோ இரயில் நிலையம் வரை 15 கி.மீ. நீளத்திற்கு 11 உயர்மட்ட மெட்ரோ இரயில் நிலையங்களில் நாளை அக்டோபர் 11, 2026 முதல் மெட்ரோ இரயில் பயணிகள் சேவை தொடங்கப்படுகிறது என்பதை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறது. பூவிருந்தவல்லி புறவழிச்சாலை, பூவிருந்தவல்லி பேருந்து நிலையம், பூவிருந்தவல்லி அரசு மருத்துவமனை, கரையான் சாவடி, குமணண் சாவடி, காட்டுப்பாக்கம், அயப்பன்தாங்கல், தெள்ளியாரகரம், போரூர் புறவழிச்சாலை, போரூர் சந்திப்பு மற்றும் வடபழனி ஆகிய 11 மெட்ரோ இரயில் நிலையங்கள் இந்த வழித்தடத்தில் உள்ளன.

தொடக்க நாளான 11 அக்டோபர் 2026 அன்று, மெட்ரோ இரயில் சேவைகள் மாலை 4 மணி முதல் தொடங்கி, இரு திசைகளிலும் இரவு 9 மணி வரை இயக்கப்படும். அதனைத் தொடர்ந்து, மறுநாளான 12 அக்டோபர் 2026 முதல், இந்த 15 கி.மீ. நீளமுள்ள வழித்தடத்தில் இரு திசைகளிலும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை மெட்ரோ இரயில் சேவைகள் இயக்கப்படும்.

பூவிருந்தவல்லி புறவழிச்சாலை மெட்ரோ முதல் வடபழனி மெட்ரோ இடையே வழித்தடம் 4-ல் (மஞ்சள் வழித்தடம்) மெட்ரோ இரயில் கால அட்டவணை மற்றும் இயக்க இடைவெளி:		
Day	**Peak Hour Frequency**	**Non-peak Hour Frequency**
திங்கட்கிழமை - சனிக்கிழமை	08:00 - 11:00 Hrs 17:00 - 20:00 Hrs **Every 10 minutes**	07:00 - 08:00 Hrs 11:00 - 17:00 Hrs 20:00 - 21:00 Hrs **Every 15 minutes**
ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்கள்	No Peak Hour Service	07:00 - 21:00 Hrs **Every 15 minutes**

நாள்தோறும் இரு முனையங்களிலிருந்தும் (பூவிருந்தவல்லி புறவழிச்சாலை மெட்ரோ மற்றும் வழித்தடம் 4 வடபழனி மெட்ரோ) கடைசி மெட்ரோ இரயில் சேவை இரவு 9 மணிக்கு புறப்படும்.

பொதுமக்கள் மற்றும் பயணிகள் அனைவரும் மெட்ரோ இரயில் சேவைகளைப் பயன்படுத்தி, தங்களது பயணங்களை அதற்கேற்ப திட்டமிட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு: கூடுதல் இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.